# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


## நேபாள், இந்தியா மற்றும் ஹாங்காங்கில் நடைபெற்ற போதகர்கள் கருத்தரங்கும் கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டங்களும்





































2016, நவம்பர் 8 முதல் 21 வரை மான்மின் உலக வழிநடத்தும் போதகர் உயர்திரு. ஹீசன் லீ அவர்கள் (படம் 1) நேபாள், இந்தியா மற்றும் ஹாங்காங்கில் போதகர்கள் கருத்தரங்கையும், கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தையும் நடத்தி, பரிசுத்தமாகுதலின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, வல்லமையான கைக்குட்டையை வைத்து ஜெபித்தார்கள்.

### காத்மாண்டு, நேபாள் : போதகர்களை விழித்தெழச்செய்தல் மற்றும் குஷ்டரோகம் சுகமடைதல்

நவம்பர் 10 அன்று, உயர்திரு. லீ அவர்கள் காலையில் நேபாள் மான்மின் சபை விசுவாசிகளுடன் ஒரு கூட்டத்தில் பங்குபெற்று, அதன்பின்பு போதகர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கருத்தரங்கை நடத்தினார். அந்தக் கருத்தரங்கில் ஏறக்குறைய 750 பேர் பங்குபெற்றனர் (படம் 2). துபாய், பக்ரைன் மற்றும் நேபாளின் பல பகுதிகளிலிருந்து வாஞ்சையோடு அநேகர் வந்து பங்குபெற்றனர்.

நவம்பர் 11 அன்று காலை, நேபாள் மான்மின் சபையின் 11வது ஆண்டுவிழா ஆராதனையும் கொண்டாட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அதில் ஏறக்குறைய 600 பேர் பங்குபெற்றனர். உயர்திரு. லீ பிலிப்பியர் 2:17–18 வசனத்திலிருந்து 'மாற்றம்' என்ற தலைப்பில் செய்தியை பிரசங்கித்தார்.

மதியவேளையில், உயர்திரு. லீ அவர்கள் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக்கொடுத்த கைக்குட்டையை (அப். 19:11–12) வைத்து ஜெபித்தார்கள். அவர்கள் ஜெபித்தப் பிறகு (படம் 7) அநேக மக்கள் தங்களுடைய சுகத்தைக் குறித்து சாட்சி சொன்னார்கள். அநேக மக்கள் ஆஸ்துமா, அரிப்பு, தைராய்டு வியாதிகள் மற்றும் சிறுநீர் அடங்காமை போன்ற தங்களுடைய வியாதிகளிலிருந்து சுகமானார்கள். சகோதரர் ஹோம் பகதுல் ராஜ் (படம் 8) மூன்று வருடங்களாக செவிடாயிருந்த காதுகள் வழியாக கேட்கும்திறனை பெற்றுக்கொண்டார்; அவருடைய வளைந்த முதுகும் நேரானது. சகோதரர் ஜெய்ராம் பகூல் குஷ்டரோகத்திலிருந்து சுகமானார் (அவருடைய சாட்சி பக்கம் 4ல்).

### டெல்லி, வட இந்தியா: செவி குறைபாட்டின் சுகமும், சிக்கன்குனியாவிலிருந்து நேரம் இடத்தை தாண்டி நடந்த சுகமும்

நவம்பர் 13 அன்று, டெல்லி மான்மின் சபை அதன் 4வது ஆண்டுவிழா ஆராதனையை பங்குபெற்ற ஏறக்குறைய 350 பேருடன் (படம் 3 மற்றும் 4) கொண்டாடியது.

உயர்திரு. லீ அவர்கள் 1 யோவான் 3:18ன் அடிப்படையில் "கனிகள்" என்ற தலைப்பில் செய்தியை பிரசங்கித்து, கைக்குட்டையை வைத்து ஜெபித்தார். சகோதரர் பாபு கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின்பு ஏற்பட்ட பின்விளைவுகளிலிருந்து சுகமானார். வீட்டில் சிக்கன்குனியாவால் பாதிக்கப்பட்டிருந்த சகோதரி ரோகனாவின் தாயார் நேரம் இடத்தை தாண்டி சுகத்தைப் பெற்றுக்கொண்டார் (படம் 9).

சகோதரர் உமேஷ் (படம் 10) ஒரு செவிடர், ஆனால் 2016 மான்மின் கோடை முகாமில் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தைப் பெற்றதால் கேட்கத் துவங்கினார். அவர் தனக்கு அறிமுகமான செவிடர்களை கூட்டத்தில் பங்கு பெறும்படி நடத்தினார். அவர்களில் நான்குபேர் கேட்கத் துவங்கினர். மற்ற அநேக ஜனங்கள் தங்களது மோசமான கண்பார்வைத் திறன், சர்க்கரை வியாதிகள் மற்றும் ஒவ்வாமையிலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொண்டனர்.

### சென்னை, தென் இந்தியா மற்றும் ஹாங்காங்: செவிட்டுத்தன்மை மற்றும் குருட்டுத்தன்மையிலிருந்து சுகம்

நவம்பர் 16 அன்று, உயர்திரு. லீ சென்னை மான்மின் சபை விசுவாசிகளை சந்தித்தார். சபை அதன் 12வது ஆண்டுவிழா ஆராதனையை ஏறக்குறைய 500 பேரோடு (படம் 5 மற்றும் 6) கொண்டாடியது. மேலும் அவர் கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தையும் நடத்தினார். அவர் "அன்பு" (யோவான் 15:7–9) என்ற செய்தியை பிரசங்கித்து, கைக்குட்டையை வைத்து ஜெபித்தார்.

ஆகஸ்டு 2016ல் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தினால் மாரடைப்பின்நிமித்தம் மரணத் தருவாயிலிருந்து மீண்டுவந்த சகோதரர் ஜஸ்வந்த் சிங் தூக்கமின்மை மற்றும் தோள்பட்டை வலியிலிருந்து சுகமானார் (படம் 11).

சகோதரர் ராஜேந்திரன் (படம் 12) தன் இரண்டு காதுகளிலும் கேட்கவும், பேசவும் துவங்கினார். சகோதரி ரெபேக்காள் சர்க்கரை வியாதியிலிருந்தும், அதனால் விளைந்த உடல் வலிகளிலிருந்தும் சுகமானார்கள். சகோதரர் ரூபன் கால் எலும்பு முறிவிலிருந்து சுகமானார். கூடுதலாக, இன்னும் அநேகர் ஆஸ்துமாவிலிருந்து சுகமானார்கள்; சிலர் அசுத்த ஆவியின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர். வேலைஸ்தலத்தில் பதவி உயர்வு மற்றும் பொருளாதார ஆசீர்வாதங்கள் போன்ற பல்வேறு வகையிலான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

நவம்பர் 20 அன்று, ஹாங்காங்கில் ஸ்தோத்திர ஞாயிறு ஆராதனையும், பரிசுத்த திருவிருந்தும் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நடந்த கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டத்தில் அநேக மக்கள் குருட்டுத்தன்மை போன்ற பலவித வியாதிகளிலிருந்து சுகத்தைப் பெற்றுக் கொண்டனர்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# “என்னை நேசிக்கிறவர்கள்”

“என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்” (நீதிமொழிகள் 8:17).

தேவன் சகிப்பு, பொறுமை, நம்பிக்கை மற்றும் காத்திருத்தலோடு தம்முடைய பிள்ளைகளை மாறாத நித்தியமான அன்பினால் நேசிக்கிறார். இந்தச் செய்தியின் மூலமாக தேவனை நேசிக்கிற ஜனங்களை உண்மை, விருத்தசேதனம் மற்றும் ஆத்துமாக்களுக்கான அன்பு என்ற மூன்று அம்சங்களில் ஆராய்வோம்.

## முதலாவது, தேவனை நேசிக்கிறவர்கள் உண்மையானவர்கள்

1 கொரிந்தியர் 4:2 சொல்கிறது, “மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம்.” தேவனுடைய ராஜ்யத்தை நிறைவேற்றுவதற்கு ஊழியர்களின் அர்ப்பணிப்பு இருக்க வேண்டும். இந்தக் காரணத்திற்காக, தேவன் தம்முடைய இருதயத்தைப் புரிந்து கொண்டு தம்முடைய திட்டத்தை நிறைவேற்றக்கூடியவர்களை கண்டறியும்படியாக பூமியெங்கும் தேடிக்கொண்டிருக்கிறார். மேலும், எதாவது ஒரு ஊழியர் உண்மையான வேலையின் மூலமாக பிதாவின் விருப்பங்களை நிறைவேற்றினால், அவர் அவர்களுக்கு மகிமை மற்றும் ஆசீர்வாதங்களை பலனளிப்பார்.

யோவான் 6:63ம் வசனத்தின் முற்பகுதி, “ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது” என்று சொல்கிறது. எனவே நம்முடைய உண்மை ஒரு மாம்சீகமானதாக அல்ல, மாறாக ஆவிக்குரிய உண்மையாக இருக்க வேண்டும். நாம் ஆவிக்குரிய உண்மையை பெற்றுக்கொள்வதற்கு முதலாவதாக இரத்தம் சிந்தப்படத்தக்க அளவிற்கு பாவத்திற்கு எதிராகப் போராடுவதின்மூலம் நம் இருதயத்தை விருத்த சேதனம் பண்ணவேண்டும். நீங்கள் திருச்சபையில் ஒரு தலைவராக இருந்துகொண்டு இன்னமும் தேவனை அவமதித்து வந்தால் அல்லது உங்களது முற்கோபம், கசப்புணர்வுகள், இறுமாப்பு, பேராசை போன்றவைகளால் பிறர் இடறிவிழும்படி செய்து கொண்டிருந்தால் உண்மையான ஊழியர் என்று எப்படி நீங்கள் அங்கீகரிக்கப்பட முடியும்?

மேலும், ஆவிக்குரிய உண்மையுள்ளவர்கள் தங்களது கடமைகளை தங்களின் சொந்த கனத்திற்காகவோ லாபத்திற்காகவோ அல்ல, ஆண்டவருக்காகவும் ஆத்துமாக்களுக்காகவும் நிறைவேற்றுவார்கள். மாம்சீக ரீதியில் உண்மையாக இருப்பவர்கள் ஆண்டவரைக் காட்டிலும் பிற ஜனங்கள் பார்ப்பதற்காக விழிப்போடு இருப்பார்கள். அவர்கள் சபை மற்றும் ஆத்துமாக்களுடைய லாபத்தைக் காட்டிலும் தங்களது சுய கனத்தையும் லாபத்தையும்தான் தேடுவார்கள். அப்படிப்பட்ட மக்கள் சில காலங்களுக்கு மிகவும் உண்மையானவர்களைப் போல தென்படலாம், ஆனால் அவர்கள் காலம்மாற தங்களது மனதையும் மாற்றிக் கொள்வார்கள்.

தேவனை நேசிக்கிறவர்கள் தங்களுடைய வேலையானது அங்கீகரிக்கப்படாவிட்டாலும்கூட, ஆண்டவர் எங்களை அங்கீகரித்தாரே, போதும் என்று திருப்தியடைந்துகொள்வார்கள். ஒரு சிறிய விஷயத்திலும் ஆண்டவரின் கிருபைக்காக அவர்களால் கைமாறு செய்ய முடியுமானால் அதைக் குறித்து சந்தோஷமடைவார்கள். தேவன் தமக்காக உண்மையுள்ள ஊழியர்களை பூமியெங்கும் தேடிக்கொண்டிருக்கையில், “அந்தப் பிள்ளையால் என் இருதயத்தோடு இந்த கடமையை நிறைவேற்ற முடியும்” என்று உங்கள்மேல் சந்தோஷமடையும்படி நீங்கள் மாறுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

## இரண்டாவது, தேவனை நேசிக்கிறவர்கள் பரிசுத்தமாக மாற முயற்சி செய்வார்கள்

நீங்கள் யாரையாவது விரும்பினால், அந்த நபர் மீது அதிக ஆர்வத்தைக் காண்பிப்பீர்கள். அவர்களுக்கு என்ன உணவு பிடிக்கும், என்ன வண்ணம் பிடிக்கும், எப்படிப்பட்ட பரிசுகள் அவர்களை சந்தோஷப்படுத்தும், அவர்களை சந்தோஷப்படுத்தக்கூடிய காரியங்கள் எவை என்று அறிந்துகொள்ள விரும்புவீர்கள்.

இப்படித்தான் தேவனை நேசிக்கிறவர்களுக்கும் பொருந்தும். அவர்கள் எப்பொழுதும் தேவனுடைய இருதயத்தையும் விருப்பதையும் அறிந்துகொள்ள முயற்சிப்பார்கள். “எவ்வாறு தேவனை நான் பிரியப்படுத்த முடியும்?” “இப்பொழுது பிதா நான் என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறார்?” என்று யோசித்துக்கொண்டிருப்பார்கள். தேவனை அதிகமாய் சந்தோஷப்படுத்தக்கூடிய நம்மிடத்தில் இருக்கவேண்டுமென அவர் அதிகமாக விரும்புவது எது? அதுதான் நம்முடைய பரிசுத்தம்.

1 தெசலோனிக்கேயர் 4:3ம் வசனத்தின் முதல் பகுதி சொல்கிறது, “நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.” 3 யோவான் 1:4 சொல்கிறது, “என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை.” இந்த வசனங்களைப் போல இன்னும் பரிசுத்த வேதாகமத்தின் அநேக பகுதிகள் நமக்கு பரிசுத்தமாக மாறவும், சுத்திகரிக்கப்படவும் அறிவுறுத்துகின்றன.

நான் ஒரு புதிய விசுவாசியாக இருந்தபொழுது பரிசுத்த வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருக்கையில் செய், செய்யாதே, கைக்கொள், விட்டு விலகு என்று நமக்கு குறிப்பிட்டு சொல்கிற அனைத்து கட்டளைகளையும் நான் எழுதி வைத்தேன். அவைகளுக்காக நான் ஜெபித்தேன்; எதையெல்லாம் நிறைவேற்றினேனோ அவைகளை அழித்துவிட்டேன். பாவச்சுபாவத்தையே என் இருதயத்திலிருந்து வேரறுக்கும்படிக்கு உபவாசம் மற்றும் ஜெப வாழ்க்கையை வாழ்ந்தேன். பிறகு நான் ஒரு போதகராகும்படிக்கு அழைப்பை பெற்றுக்கொண்டேன். பல்வேறு விதமான வல்லமையான கிரியைகளை நிகழ்த்தி 11,000 கிளை ஆலயங்கள் கொண்ட ஒரு பெரிய சபையை உருவாக்கினேன். ஆனாலும் நான் ஒருபோதும் இவை போதும் என்று நிறுத்தியதில்லை. நான் தொடர்ச்சியாக என்னை ஆராய்ந்துப் பார்த்து, “இது தேவனுடைய பார்வையில் பூரணமாக இருக்குமா? ஒருவேளை ஆண்டவர் இந்தச் சூழ்நிலையில் இருந்தால் என்னச் செய்வார்?” என்று யோசிக்கும் நிலையை அடைய முயற்சி செய்கிறேன்.

ஆண்டவர் மறுபடியும் வருமட்டுமாக பரிசுத்தத்திற்கான நம்முடைய வாஞ்சை கட்டாயம் தணிந்துவிடக்கூடாது. நாம் பரிசுத்தத்தை நோக்கி மகிழ்ச்சியோடும் நன்றியோடும் ஓட வேண்டும். நாம் தேவனை பிரதிபலித்து, மகிழ்ச்சியோடும் நன்றிநிறைந்த உள்ளத்தோடும் இழந்து போன தேவ சாயலைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் கடினமாக வேலை செய்துவிட்டீர்கள் என்று யோசித்து நின்றுவிடக்கூடாது. முன்பைக் காட்டிலும் அதிக உண்மையாயிருந்து தேவனுடைய வேலைக்காக அதிகமான நேரத்தைச் செலவிட வேண்டும். நீங்கள் கன்மலை விசுவாசத்திலிருந்தாலும், ஆவி மற்றும் பூரண ஆவியின் இருதயத்தைப் பெற்றிருந்தாலும்கூட இன்னமும் பழுதற்றவர்களாகும்படி தொடர்ந்து கடினமாக முயற்சி செய்துகொண்டிருக்க வேண்டும். நீங்கள் இரத்தம் சிந்தியேனும் பாவத்திற்கு எதிராகப் போராடுகின்றீர்களா என்பதை ஆராய வேண்டும். நீங்கள் உண்மையிலேயே பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுகிறீர்களா, உங்களைக் காட்டிலும் பிறரை சிறந்தவர்களாக கருதுகின்றீர்களா, பிறருடைய லாபத்தைத் தேடுகின்றீர்களா, நீங்கள் செய்வதையெல்லாம் தேவனுடைய மகிமைக்காகச் செய்கின்றீர்களா? உங்களுடைய வார்த்தைகளிலும் செயல்களிலும் பிறருக்கு நன்மதிப்பையும் பெருந்தன்மையையும் காண்பிக்கின்றீர்களா? இவைகளையெல்லாம் நீங்கள் பரிசோதிக்க வேண்டும்.

## மூன்றாவது, தேவனை நேசிக்கிறவர்கள் ஆத்துமாக்களை நேசிப்பார்கள்

தேவன் மனித வேளாண்மையில் அதிக கரிசணைக் கொள்வது ஆத்துமாக்களைத்தான். திருச்சபையில், ஆண்டவரை ஏற்றுக்கொண்டு நல்ல விசுவாசமுடைய கடினமாக முயற்சிக்கிற ஆத்துமாக்கள் இருப்பார்கள், அதேவேளையில் மற்ற ஆத்துமாக்கள் ஜெபிக்கவும் வேதவசனத்தின்படி வாழவும் தங்களுக்கு பெலனில்லை என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களில் சிலர் சோதனைகள் பாடுகளின் மத்தியில் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த உலகத்தில், மரணத்தின் பாதையில் போய் கொண்டிருக்கிற திரளான ஆத்துமாக்கள் இருக்கிறார்கள்.

தேவனுடைய இருதயத்தைப் புரிந்துகொண்டவர்கள் இதுபோன்ற மக்களிடமிருந்து தங்களின் முகத்தைத் திருப்பிவிடக்கூடாது. அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஆத்துமாக்களுக்கு புத்திமதி சொல்லி, தேவையுள்ளவர்களுக்கு உதவ வேண்டும். அவர்கள் பெலவீனர்களுக்கு பெலனையும் ஆறுதலையும் கொடுத்து, அவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வதற்காக அவர்களைப் பராமரிக்க வேண்டும். பாவங்களைச் செய்கிற ஆத்துமாக்களைப் பார்க்கும்பொழுது அவர்களுக்காக பரிந்துபேசி ஜெபத்தில் மன்றாட வேண்டும்.

யாத்திராகம காலத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் பத்துவாதைகள் உட்பட பல திரளான அதிசயங்களை அனுபவித்தார்கள், எனினும் யாத்திராகம நாட்களில் கஷ்டமான ஒவ்வொரு நேரங்களிலும் குறைபேசினார்கள். அவர்கள் மோசேயையும் கல்லெறியப் பார்த்தார்கள். ஒருவேளை நீங்கள் மோசேயாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? அவர்களைப் பற்றி, “நான் எவ்வளவு சிறப்பாக முயற்சித்தேன், அவர்களோ ஒன்றுக்கும் உதவாதவர்கள். என் சொந்தப் பெலத்தினால் அவர்களையெல்லாம் மாற்ற முடியாது” என்று யோசித்து கைவிட்டிருப்பீர்களா?

ஆனால் மோசேயோ தன்னுடைய உயிரையே அவர்களுக்காக பணையம் வைத்தார். யாத்திராகமம் 32:32 சொல்கிறது, “ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்.”

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு மனிதன் சகிக்கமுடியாத கஷ்டங்களினால் வேதனைப்பட்டார். அவருடைய உயிருக்கு அச்சுறுத்தலான பல்வேறு சூழ்நிலைகளைச் சந்தித்தார். ஆனாலும் அவர் தன்னை ஒருபொருட்டாக எண்ணவில்லை. இன்னும் ஒரு ஆத்துமாவாவது இரட்சிக்கப்பட முடியும் என்பதற்காக ஆண்டவரின் சுவிசேஷத்தை அறிவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். இப்படிப்பட்ட அன்பினால் உங்களுடைய இருதயமும் நிறைந்திருக்க வேண்டும்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்களை மாற்றிக்கொள்வதில் தொடர்ந்து முயற்சித்து, விசுவாச அளவில் முழு நிறைவை நீங்கள் அடைவீர்களென்று நம்புகிறேன். பலவீனமான மரித்துக்கொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்காக தம்முடைய கண்ணீரைச் சிந்தின ஆண்டவரின் இருதயத்தை நீங்கள் பெற்றுக்கொண்டு, அவர்களை இரட்சிப்பின் பாதைக்குள் வழிநடத்த கடினமாக முயற்சிப்பீர்களாக என ஆண்டவருடைய நாமத்தினால் நான் ஜெபிக்கிறேன்.

### விசுவாசத்தின் அறிக்கை

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]

# தேவனைப் பிரியப்படுத்தும் வகையான உற்சாகம்

உங்களுடைய வேலைகளில் நீங்கள் உண்மையாக இருக்க அதிக ஜாக்கிரதையோடு கடினமாக முயற்சி செய்வதைப் போல தோன்றலாம். ஆனால் எப்படிப்பட்ட கனிகளை நீங்கள் விளைவிக்கிறீர்கள்? நீங்கள் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் உங்களுடைய ஆவிக்குரிய நிலை குறைவானதாக காணப்படலாம்; உங்களில் சிலர் இன்னமும் சோதனைகளின் மத்தியில் இருக்கலாம். இப்பொழுதும் உங்களுடைய உற்சாகமானது தேவன் பிரியப்படுகிற வகையைச் சார்ந்ததாக இருக்கிறதா என்பதைப் பரிசோதிப்போம். இதன்மூலம், நீங்கள் விதைத்துள்ள விசுவாசத்தின் விதையானது பரிபூரணமான ஆசீர்வாதங்களின் கனிகளை விளைவிக்கும்படி செய்வோம்.

## குறிப்பு 1

### உங்களது உற்சாகம் தேவன்மீதுள்ள உங்களது அன்பினால் வருகிறதா?

சிலர் மிகவும் சுறுசுறுப்புள்ள குணாதிசயங்களோடு பிறந்திருப்பார்கள். அவர்கள் தங்களுடைய கடமைகளுக்கு பொறுப்பெடுத்துக்கொள்வார்கள். அவர்கள் திருச்சபையின் செயல்பாடுகளில் ஆர்வத்தோடு பங்கெடுத்துக் கொள்வார்கள். மற்றவர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென விரும்புவதால் தங்களுடைய உற்சாகத்தை காண்பிப்பார்கள். ஆனால் ஒருவேளை அவர்கள் செய்வதை நிதானித்துப் பார்க்க வில்லையென்றால், “நான் தேவனை நேசிப்பதால் தேவனுடைய வேலைகளைச் செய்கிறேன்” என்று தங்களைதாங்களே வஞ்சித்தவர்களாய் நினைத்துகொள்வார்கள்.

தேவனுக்கான தங்களது அன்பில் ஆர்வமுள்ளவர்கள் தங்களிடமிருந்து தேவன் எதை விரும்புகிறார் என்பதை அறிய தேவனுடைய சித்தத்தையும் இருதயத்தையும் தேடுவார்கள். அவர்கள் தாங்கள் நல்லவைகள் என்று நினைக்கிற பாதையை பின்பற்றமாட்டார்கள். அவர்கள் தாங்கள் விரும்புகிற இலக்குகளை அடைய முயற்சிக்க மாட்டார்கள். அவர்கள் தேவனுடைய இலக்குகளையும் வழிமுறைகளையும் நாடுவார்கள்; அவருடைய இருதயத்தின் படி சித்தத்தின்படி கீழ்ப்படிவதற்கு முயற்சிப்பார்கள்.

நீங்கள் தேவனை அதிகம் நேசிப்பதாலும், தேவனுடைய உண்மையான பிள்ளையாக மாற விரும்புவதாலும் விசுவாசத்தில் ஒரு பெரிய அளவிற்காக ஊக்கமாக வாஞ்சிக்கலாம். எனினும் சிலர் இப்படியாக நினைப்பார்கள், “நான் பிறரைப் போல ஆர்வமாக இருக்கிறேன். ஆனால் ஏன் நான் விசுவாசத்தில் தாழ்ந்துள்ளேன்?” அல்லது, “நான் என் பதவிக்கேற்றபடி என்னுடைய விசுவாசத்தின் அளவைப் பெற்றால் போதும். மற்றபடி நான் சங்கப்பட வேண்யடிதில்லை.” இப்படிப்பட்ட மனப்பான்மை உங்களுக்கு இருந்தால் அது நீங்கள் உங்களது விருப்பதை நிறைவேற்ற விரும்புகிறீர்கள் என்பதைக் காண்பிக்கிறது.

தேவனுடைய சித்தத்திற்குப் பதிலாக உங்களுடைய சித்தத்தை நீங்கள் நிறைவேற்ற விரும்பினால், சில காலத்திற்கு நீங்கள் வசனத்தைக் கற்றுக்கொண்டு ஆர்வத்தோடு ஜெபிக்கலாம். ஆனாலும் நீங்கள் விரும்பின முடிவைப் பெறாவிட்டால் நீங்கள் சோர்ந்து போய் முயற்சியின் வேகத்தை இழந்துவிடுவீர்கள். நீங்கள் ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் ஜெபிக்கலாம், ஆனால் நீங்கள் விரும்புகிறபடி எதுவும் நடக்காவிட்டால் நீங்கள் இடையில் நின்றுவிடுவீர்கள். உங்களது ஜெப ஆர்வத்திற்கான காரணம் தேவனுக்கான விசுவாசமாகவோ அன்பாகவோ இல்லாமல் இருப்பதினால் அப்படி நின்றுவிடுகின்றீர்கள்.

தேவன்மீதான உண்மையான அன்பினால் உங்களது கடமைகளை நீங்கள் நிறைவேற்றினால், நீங்கள் யாவரோடும் சமாதானமாயிருப்பீர்கள். நீங்கள் உங்களது திருச்சபை கடமைகளை செய்யும்போது, பிறர் புகழ வேண்டும் என்பதற்காகவா அல்லது தேவனை உண்மையிலேயே நேசிப்பதால் அதைச் செய்கிறீர்களா என்பதை நீங்கள் பரிசோதிக்க வேண்டும்.

மேலும், நீங்கள் மற்றவர்கள் பார்க்கிற வேலைகளை மாத்திரமல்ல, மிகவும் கடினமான அசௌகரியமான மற்றவர்கள் பார்க்காத வேலைகளையும் நன்றியின் இருதயத்தோடுகூட செய்வீர்கள். சில சமயம் நீங்கள் செய்த ஒரு காரியத்திற்காக தவறாக குற்றப்படுத்தப்பட்டாலும் கூட, அமைதலோடு தேவனை நோக்கிப் பார்ப்பீர்கள்.

## குறிப்பு 2

### உங்களது உற்சாகம் மாறாத சத்தியமானதா?

சிலர் கிருபை நிறைந்தவர்களாய் காட்சியளிப்பார்கள். தங்களது விசுவாசத்தில் ஆர்வமாக இருப்பதைப்போல தோன்றுவார்கள். ஆனால் சீக்கிரத்தில் அவர்களை எங்கேயும் காணமுடியாது. அவர்களது யோசனைகள் அல்லது அவர்களது சொந்த லாபத்திற்கு ஏற்றபடி காரியங்கள் ஒத்துப்போக வில்லையென்றால் அவர்களின் வாஞ்சை குளிர்ந்துப்போய் விடும்.

சிலருடைய மனது பணம், புகழ் மற்றும் உலகத்தின் வேறே சிந்தனைகளால் எடுத்துக் கொள்ளப்படுவதால், விசுவாச வாழ்வை அவர்கள் அலட்சியம் செய்துவிடுகின்றனர். இன்னும் சில சந்தர்ப்பங்களில், தெய்வீக சுகம் அல்லது பொருளாதார ஆசீர்வாதங்கள் போன்றவற்றிற்காக தேவனிடத் திலிருந்து பதிலைப் பெற விரும்புகிற காரணத்தால் தங்களது விசுவாசத்தில் ஆர்வத்தோடு இருப்பார்கள். எனினும் அவர்கள் விரும்புகிற வழியில் நேரத்தில் துரிதமாகப் பதிலைப் பெறாவிட்டால் அவர்களது உற்சாகம் குளிர்ந்துப்போய் விடுகிறது. இன்னும் சிலர் தங்களது குழுக்களில் பதவிகளைப் பெறவிரும்புவதால் அனைத்து கூட்டங்களிலும் பங்குப்பெற்று, தங்கள் குழுக்களுக்கு பணரீதியாக சரீர உழைப்பு மூலமாக பணிவிடை செய்கின்றனர்.

ஆனால் அவர்கள் விரும்புகிற பதவிகளைப் பெறாவிட்டால், கூட்டங்களுக்கு அதற்கு பிறகு வரவே மாட்டார்கள். சில மக்கள் தங்களுக்கு பொறுப்பு இருக்கும்போது மட்டுமே சுறுசுறுப்பாக பணியாற்றுவார்கள். ஒருவேளை வேறு யாருக்காவது பொறுப்பு கொடுக்கப்பட்டால், அவர்கள் ஒத்துழைக்காமல் ஒதுங்கிப் போய் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தன் ஊழியத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கும் உற்சாகத்தில் ஒருபோதும் குளிர்ந்து போனதே இல்லை. அவர் எவ்வித மகிமையும் அல்லது கணிசமான கனியையும் பெறாதபோது அவர் மனமுடைந்துபோகவில்லை. அவருடைய சொந்த ஜனங்களான யூதர்கள் அவரைக் கொல்லும்படி அனைத்து இடங்களிலும் அவரைப் பின் தொடர்ந்தபோதும், புறஜாதிகள் விக்கிரக வழிபாட்டிற்கு இடையூறு செய்கிறான் என்று அவரை துன்புறுத்தியபோதும் அவர் சுவிசேஷத்தை அறிவிக்காமல் இருக்கவில்லை. அவர் அதிக உழைப்பினால் உருவாக்கின திருச்சபையில், விபசாரம் மற்றும் மற்ற பாவங்கள் அங்கத்தினர்கள் மத்தியில் உள்ளது என்ற செய்தி அவரை அதிகம் துயரப்பட வைத்தது. சில ஊழியர்கள் துரோகம் செய்து, அவரை விட்டுப்போய்விட்டனர் மற்றும் சிலர் அப்போஸ்தலனாக தகுதியில்லாதவன் என்று புறக்கணித்தனர்.

ஆனால் அவரோ இதுபோன்ற எந்த வகை துன்பங்களையும் கவனிக்கவில்லை. அவர் சோர்ந்தோ மனமுடைந்தோ போகவில்லை. அவர் முறுமுறுத்து, “இவையெல்லாவற்றின் வழியாக நான் ஏன் போகவேண்டும்?” “ஏன் ஆண்டவர் எனக்கு உதவவில்லை?” என்றும் சொல்லவில்லை. அவர் ஒருபோதும், “இன்னும் எத்தனை காலம் நான் வேதனைப்பட வேண்டும்?” அல்லது “இதை இனியும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது”என்று நினைக்கவில்லை.

அவர் மரித்துப்போய்விடும் அளவிற்கு கல்லால் அடிக்கப்பட்ட பிறகும், நினைவுக்கு திரும்பின உடனே தன்னுடைய ஊழியத்தின் அடுத்த இடத்திற்கு பயணம் செய்ய புறப்பட்டுச் சென்றார். அவர் அடிக்கப்பட்டு, இரத்தம் சூழ சிறைச்சாலையில் தள்ளப்பட்டபொழுதும் உரத்த சத்தமாய் தேவனை துதித்தார்; அவருடைய சத்தம் அனைத்து கைதிகளாலும் கேட்க முடிந்தது. அவர் சிறைவாசத்தில் இருந்து விடுதலையாக பிரசங்கிக்க செல்ல முடியாதபொழுதும் விசுவாசிகள் மற்றும் தலைவர்களின் விசுவாசத்தை நிலைப்படுத்த ஒவ்வொரு சபைக்கும் கடிதங்களை அனுப்பினார். ஒருபோதும் மாறாத உண்மையானவர்களாய் அப்போஸ்தலனாகிய பவுலின் உற்சாகத்தைப் போல ஆண்டவருக்கான உங்களுடைய உற்சாகமானது தேவனால் அங்கீகரிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

## குறிப்பு 3

### உங்களது உற்சாகம் இரட்சிப்பை தந்த தேவனுடைய கிருபைக்கான நன்றியின்நிமித்தம் வருகிறதா?

உங்களது உற்சாகம் மாறாத ஒன்றாக இருப்பதற்கு தேவனிடத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட கிருபையை ஒருபோதும் மறக்கக்கூடாது. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னை பாவிகளில் பிரதான பாவியாக கருதியதால், தன்னைப் போன்ற ஒரு நபரை இரட்சித்த கிருபையின்நிமித்தம் தன் கடமையை நிறைவேற்றுவதில் மிகுந்த வாஞ்சையோடு இருந்தார்.

அவர், “என்னை இரட்சித்த கிருபைக்காக நான் மிகுந்த நன்றியோடு இருக்கிறேன். நான் ஆண்டவரை துன்பப் படுத்தினவன்; ஆனாலும் எனக்கு அப்போஸ்தலன் என்ற ஒரு கடமையை அருளிய கர்த்தரின் கிருபை எவ்வளவு பெரியது! கர்த்தருடைய நாமத்தை அறிவிக்கும் இப்படிப்பட்ட ஒரு விலையேறப்பெற்ற கடமையை நானா பெற்றுக்கொண்டேன்?” என்று தன் வாழ்வு முழுவதும் நினைத்து வாழ்ந்தார். அவர் துன்பங்களினால் உபத்திரவங்களினால் அவதிப்பட்டபோதிலும் சுவிசேஷத்தை அறிவிப்பது என் கடமை என்று நினைத்து அதற்காக தன்னுடைய சிறந்ததை முயற்சித்தார்.

தேவனுடைய கிருபைக்காக நீங்கள் நன்றியின் உள்ளத்தோடு உண்மையாக ஊழியம் செய்வீர்களென்றால், நீங்கள் சிறப்பாக செய்த உங்களுடைய வேலைக்காக ஒருபோதும் புகழையோ வெகுமதிப்பையோ விரும்பமாட்டீர்கள். என்னதான் நீங்கள் உங்களையே அர்ப்பணித்து தியாகம் செய்திருந்தாலும், நீங்கள் தேவனுக்காக கொடுக்கும் எதைக்காட்டிலும் உங்களுக்கு அருளப்பட்ட தேவ கிருபையானது மிகவும் பெரியதாகவே இருக்கும்.

நீங்கள் பெற்றுக்கொண்ட கிருபைகளிலேயே மிகவும் பெரிய கிருபை இரட்சிப்பின் கிருபையே. மிகவும் குறிப்பாக, இந்த நாட்களில் உலகமானது பாவங்களால் நிறைந்துள்ளது. நீங்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, மிகவும் தெளிவாகத் தேவனுடைய சித்தத்தை அறிந்தவன் என்று நினைத்தாலும், பல்வேறு வல்லமையான கிரியைகளை அனுபவித்திருந்தாலும்கூட இன்னமும் உங்களது விசுவாசத்தைக் காத்துக்கொள்வது என்பது கடினமானதுதான். எனவே பெற்ற கிருபைகளை அதிக ஆழத்தில் உங்களுக்குள் செதுக்கி வைத்து, ஒவ்வொரு நாளும் அதிக ஆர்வமானவர்களாய் மாற வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

# "25 வருட குஷ்டரோகத்திலிருந்து தேவன் என்னை சுகமாக்கினார்"



சகோதரர் ஜெய்ராம் பசூல், வயது 40, நேபாள் மான்மின் சபை

நான் வடக்கு நேபாளில் உள்ள ஒரு பட்டணத்தில் வசிக்கிறேன். எனக்கு 15 வயதிலிருந்து ஒரு பிரச்சனை இருந்தது. சிலப் பொருட்களை தொடும்போது நான் மரத்துப்போன நிலையை உணர்ந்தேன். என்னால் எதையும் உணரமுடியவில்லை; என் இரண்டு கை கால்களில் வடுக்கள் தோன்றின. என் விரல்களைகூட அசைக்க முடியவில்லை.

எனக்கு குஷ்டரோகம் இருப்பது கண்டறியப்பட்டது. மோசமான எதிர்பாராத நிஜநிலையை நான் சந்தித்ததால் என் வாழ்க்கையைப் பற்றிய சந்தேகத்தையும் விரக்தியையும் உணர்ந்தேன். 'ஏன் எனக்கு இப்படி நடந்தது!' சரீரத்தில் வலி அதிகரித்த அதே நேரத்தில் மனரீதியான வேதனையும் என்னை அதிகம் கவலைக்குள்ளாக்கியது.

உண்மையில் ஜனங்களோடு சேர்ந்து பழக முடியவில்லை; நான் எப்படிப்பட்டவனாய் இருக்கிறேன் என்பதை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. என் வியாதியை குணப்படுத்தக் கூடிய மருந்துகள் எதுவுமில்லை என்பது என்னை அதிக விரக்திக்குள் தள்ளி விட்டது.

இதற்கிடையில், நேபாள் மான்மின் சபையில் பங்குப் பெற்றுக்கொண்டு வருகிற என்னுடைய சகோதரன் சைமன் பசூல் மான்மின் தலைமை சபையை குறித்து என்னிடத்தில் பேசினான். மான்மின் மத்திய சபையின் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்த கைக்குட்டையின்மூலமாக மக்கள் ஜெபத்தைப் பெறும்போது தங்களுடைய வியாதிகளிலிருந்து சுகமடைகின்றனர் என்று சொன்னான். மேலும் மான்மின் உலக கிளைசபைகளின் வழிநடத்தும் போதகர் உயர்திரு. ஹீசன் லீ அவர்கள் நேபாள் மான்மின் சபைக்கு வரவிருக்கிறார்கள், கைக்குட்டை சுகமளிக்கும் (அப். 19:11–12) கூட்டத்தை நடத்தவிருக்கிறார்கள் என்றும் கூறினான்.

நம்பிக்கையோடு அந்தக் கூட்டத்தில் பங்குபெற்று சுகத்தைப் பெறும்படி நான் ஆசைப்பட்டேன். என் வயதான அப்பாவின் உதவியின்மூலமாக நான் காத்மாண்டுவிற்குச் சென்றேன்; நான் நவம்பர் 10 அன்று நடைபெற்ற கருத்தரங்கிலும், நவம்பர் 11 அன்று நடைபெற்ற 11வது ஆண்டுவிழா ஆராதனையிலும் கலந்துகொண்டேன். மிகுதியான கிருபையைப் பெற்றேன். நான் மதியான வேளையில் நடைபெற்ற பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெறும் கூட்டத்தில் பங்குபெற்றேன். உயர்திரு. லீ அவர்கள் ஒவ்வொரு மக்களுக்காகவும் கைக்குட்டையை வைத்து ஜெபித்தார்கள்.

பின்பு, எனக்கும் ஒரு அற்புதம் நிகழ்ந்தது! என் விரல்கள் அசைந்தன! கடந்த 25 வருடங்களாக நான் என்ன செய்து பார்த்தும் அவைகள் அசையவில்லை. அனைத்து வலிகளும் நீங்கியது, அனைத்து வடுக்களும் காணப்படாமற் போயிற்று! என்னை யாராவது தொட்டால் அதை என்னால் இப்பொழுது உணரமுடிகிறது!

எனக்காக என் வாழ்வில் தேவன் நிகழ்த்திய இந்த அற்புதத்தினால் நான் பேச்சற்றவனாய் ஆச்சரியத்தில் ஆழ்ந்துப்போனேன். அற்பமானவனாய் நான் இருந்தபொழுது தேற்றும் வெளிச்சமாக என்னிடத்தில் வந்து என் மோசமான குஷ்டரோகத்திலிருந்து என்னை சுகமாக்கிய தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் நான் செலுத்துகிறேன்!






நேபாள் மான்மின் சபையின் 11வது ஆண்டுவிழா கொண்டாட்ட நிகழ்ச்சிகள் (இடது) குஷ்டரோகத்திலிருந்து சுகமான சகோதரர் ஜெய்ராம் பசூல் (வலது)

## "காலம் கடந்து செல்ல மக்கள் நான் இளமையாகிவிட்டதாக சொல்கின்றனர்"

கண்காணியை சானோக் பார்க், வயது 79, க்வாங்சூ மான்மின் சபை




என் பிள்ளைகளால் வழிநடத்தப்பட்டு ஜனவரி, 2010ல் க்வாங்சூ மான்மின் சபையில் பங்குப்பெற துவங்கினேன். நான் சிருஷ்டிகராகிய தேவனை விசுவாசிப்பதால் எனக்கு 79 வயது ஆகிறது, ஆனாலும் நான் மிகுந்த ஆரோக்கியத்தோடு வியாதி எதுவும் இல்லாமல் இருக்கின்றேன்.

என் முகத்தில் நான் மூவான் மதுர தண்ணீரை (யாத். 15:25) பயன்படுத்த தொடங்கிய பிறகு, சுருக்கங்கள் மறைந்துபோனது. என் தோற்றம் இளமையானதைப் போன்று காட்சியளிப்பதாக மக்கள் சொல்கின்றனர். நான் சபைக்கு வருவதற்கு முன்பு கடினமான விவசாய வேலையின்நிமித்தம் எனக்கு சரீரம் முழுவதும் வலியிருந்தது, அதற்காக அக்குபஞ்சர் (குத்தூசி) சிகிச்சையை பெற்று வந்தேன். எனக்கு முன்பு கால் மூட்டில் வலி இருந்தபோது நான் மருத்துவமனைக்குச் சென்றேன்; மருத்துவர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்னார். நான் சபைக்கு வர ஆரம்பித்த பிறகு அனைத்து மூட்டு வலி அறிகுறிகளும் மறைந்துப்போய்விட்டன!

2012ம் ஆண்டு வசந்த காலத்தில், நான் முடக்கு வாதத்திலிருந்து சுகமானேன். என் சரீரத்தை யாராவது தொட்டாலே எனக்கு வலிக்கும். என் எலும்புகளின் ஒவ்வொரு இணைப்பிலும் கத்தியால் என்னை குத்துவது போன்ற வலி இருந்தது. என் கைகள் பக்கவாதமடைந்தன. அவைகளை என்னால் உயர்த்தமுடியாது, நானாகவே கழிவறைக்கும் செல்ல முடியாது. நான் படுக்கையிலே படுக்க வேண்டியிருந்தது. சபையின் பிரசங்கங்களை நான் கேட்டபொழுது, "குருடர்களின் கண்களை திறக்கவும், மரித்தவர்களை உயிரோடு எழுப்பவும் வல்லவர் தேவன். நானும் சுகத்தைப் பெற விரும்புகிறேன்" என்று ஜெபித்தேன். ஊன்றுகோலை சார்ந்துகொண்டு மான்மின் ஜெபமையத்தின் தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் பங்குப்பெறும்படி நான் சீயோலுக்கு வந்தேன். நான் 12 நாட்கள் கூட்டத்தில் பங்குப்பெற்ற பொழுது, பரத்திலிருந்து விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டேன். ஒவ்வொரு நாளும் நான் நன்றாக தேறிக்கொண்டு வந்தேன். முடிவாக நான் ஊன்றுகோலை தூங்கிப்போட்டுவிட்டு, வீட்டிற்குச் சென்றேன்.

ஜூன் 2014ல், ஆச்சரியமான ஒரு சம்பவம் எனக்கு நடந்தது. என் சபை விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த வேதாகமத்தை கண்டிப்போடு வாசிக்க துவங்கினர்; நானும் அவர்களுடன் இணைந்துகொண்டேன். நான் பரிசுத்த வேதாகமத்தை உருப்பெருக்கும் லென்சை பயன்படுத்தி வாசித்தபொழுது, என் கண்களுக்கு முன்பதாக அவை பிரகாசமாக தெரிந்தது; என் அருகில் ஒரு விளக்கை வைத்ததைப் போன்று இருந்தது. என் பார்வைத்திறன் நன்றாக மாறுகிறது என்று நான் நினைத்தேன். நான் நினைத்த அந்த வேளையில், என் கண் பார்வைத் திறன் அதிகரித்தது, நான் லென்சு இல்லாமலேயே பரிசுத்த வேதாகமத்தையும், சபையின் வாராந்திர புத்தகத்தையும் வாசித்தேன். என்னால் இப்பொழுது ஊசியில் நூலைக்கூட கோர்க்க முடியும். ஹலேலூயா!

நான் ஜூயோன்பக் மாநிலத்தில் சன்ச்சங் என்ற ஊரில் விவசாயம் செய்து தனியாக வாழ்ந்து வருகிறேன். சிலர் என்னிடம் தனிமையை உணர்கிறேனா என்று கேட்கும்போது, "தேவன் ஜீவிக்கிறார், எனக்கு GCN அலைவரிசை இருக்கிறது. பிறகு எப்படி நான் தனிமையாய் இருக்க முடியும்?" என்று பதில் சொல்வேன்.

க்வாங்சூ மான்மின் சபை மிகத் தொலைவில் இருப்பதால் என்னால் வார நாட்களில் சபைக்குப் போக முடியாது. எனவே GCN மூலமாக தானியேல் ஜெபக்கூட்டத்திலும், மற்ற ஆராதனைகளிலும் நான் பங்குப் பெறுகிறேன். எனக்கு GCN நிகழ்ச்சிகளை அவ்வளவு பிடிக்கும்.

புதன்கிழமைகளில், நான் வேலையை முடித்துவிட்டு என் தலைமுடியை சரிசெய்து, நல்ல ஆடைகளை அணிந்துகொள்வேன். நான் சபையில் இருப்பதைப் போன்று புதன்கிழமை ஆராதனையை ஏறெடுப்பேன். மேலும் நான் இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணிவரை நடைபெறும் வெள்ளி முழு இரவு ஆராதனையில் பங்குப்பெற்று தேவனுக்கு முன்பதாக துதித்து நடனமாடுவது மிகுந்த சந்தோஷமாக இருக்கும்.

எதற்காகவும் இனி மருத்துவமனைக்குப் போக வேண்டிய அவசியமில்லாத காரணத்தால் நான் பரிசுத்த ஆவியானவரின் நிறைவோடும் பரலோகத்திற்கான நம்பிக்கையோடும் வாழ்கின்றேன். எல்லா நேரங்களிலும் GCN னில் தேவனுடைய வார்த்தையை கேட்டு, தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக்கொள்கிறேன். என் ஊரிலுள்ள என்னுடைய சிநேகிதிகளிடத்தில், "என்னைப் பாருங்கள். எனக்கு எந்தவித மருந்துகளும் தேவைப்–படுவதில்லை. தேவனை விசுவாசிக்க ஆரம்பித்தது முதல் நான் ஆரோக்கியமாய் உள்ளேன்!" என்று சொல்கிறேன். நான் தேவனுக்காக ஒன்றையும் செய்யாதபோதும் அவர் எனக்கு அதிகமான ஆசீர்வா–தங்களை அருளியிருக்கிறார். தேவனுக்கு சகல நன்றிகளையும் செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com